இரட்டைக்கிளவி

இரட்டைக்கிளவியை எழுதி வாக்கியத்தை நிறைவு செய்திடுக.

1. இராணுவ வீரர்கள் பயிற்சியின் போது ____________________ வென்று ஓடினர்.

2. நில அதிர்வால் கட்டடங்கள் ____________________ வெனச் சரிவதைக் கண்டேன்.

3. மோகனா ____________________ வென்று கதவைத் தட்டினாள்.

4. கண்ணாடிப் பாத்திரங்கள் -____________________ வெனச் சரிந்து விழுந்து நொறுங்கின.

தட தட	தட தட
மட மட	மட மட

LIVEWORKSHEETS

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

சூழலுக்கு ஏற்ற பழமொழியைக் கூறுக.

1. சிகையலங்காரம் செய்யும் கலையை மதுமிதா முறையாகப் பயின்று பட்டம் பெற்றாள். சுயமாகக் கடை ஒன்றையும் வைத்து அக்கலையைச் சிறப்புறச் செய்து வருகிறாள்.

2. பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும் மாணவர்கள் தங்களின் இலக்கை அடைய அயராது உழைத்து வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

3. சிறுவயது முதலே நீச்சல் பயிற்சியைக் கற்ற குமுதினி, இன்று பள்ளியைப் பிரதிநிதித்துப் பல போட்டிகளுக்குச் சென்று வாகை சூடுகிறாள்.

4. வியாபாரத் துறையில் ஈடுபட எண்ணம் கொண்டிருந்த அண்ணன், அப்பாவின் வழிகாட்டலையும் பண உதவியையும் திறம்படப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற்றம் அடைகின்றார்.

5. அறிவியலில் சிறந்து விளங்கிய விமலன், தனது புத்தாக்க ஆற்றலைக் கொண்டு பல உருவாக்கங்களை உருவாக்கி, வெளிநாடு செல்லும் வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டான்.

LIVEWORKSHEETS

கொடுக்கப்பட்ட திருக்குறளை நிறைவு செய்க.

____

கற்றனைத் தூறும் அறிவு.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

மணற்கேணி மாந்தர்க்குத் தொட்டனைத் தூறும்

கொடுக்கப்பட்ட திருக்குறளுக்கு ஏற்ற பொருளைத் தேர்ந்தெடுக்கவும்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

எந்த அளவுக்குத் தோண்டுகின்றோமோ அந்த அளவுக்கு நீர் மணற்கேணியில் ஊறும். அதுபோல எந்த அளவுக்குக் கல்வி கற்கிறோமோ அந்த அளவுக்கு அறிவு வளரும்.

எந்த அளவுக்குத் தோண்டுகின்றோமோ அந்த அளவுக்கு அறிவு மணற்கேணியில் ஊறும். அதுபோல எந்த அளவுக்குக் கல்வி கற்கிறோமோ அந்த அளவுக்கு நீர் ஊறும்.

திருக்குறளுக்கு ஏற்ற பொருளுடன் இணைக்கவும்

தொட்டு அனைத்து	மனிதர்க்கு
மணற்கேணி	கற்கும் அளவுக்கு
மாந்தர்க்கு	சுரக்கும்/பெருகும்
கற்று அனைத்து	மணலால் ஆன கேணி
தூறும் (ஊறும்)	தோண்டும் அளவுக்கு

LIVEWORKSHEETS